**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் :SC.No.495/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW–16</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுடலைமாடன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | குத்தபாஞ்சான் | வயது | : | 75 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குத்தபாஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஐ எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 02.09.2018 ம் தேதி, மதியம் 02.30 மணியளவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் இருசக்கரவாகனத்தில் எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் பக்கம் வந்துகொண்டிருந்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் இருவரும் முன்விரோதம் காரணமாக அவர்களை வழிமறித்து, தடுத்து நிறுத்தி கெட்ட வார்த்தைகளால் பேசி, 1 வது எதிரி அ.சா.1 ஐ "இத்தோடு தொலைந்து போ"

என்று சொல்லி அரிவாளால் வெட்டினார் என்றும், அதை அவர் இடது கையால் தடுத்தபோது, அந்த வெட்டு இடது கையின் மணிக்கட்டில் பட்டு கை துண்டாகி விட்டது என்றும், மீண்டும் தாக்கியதில் வலது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு பயந்து அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:30:48 +0530